**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேந்தமங்கலம்.</u>**

**முன்னிலை: திருமதி.பி.கே. தமயந்தி,எம்,ஏ.,பி.ல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

**2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ம் நாள் வெள்ளிக்கிழமை**
**<u>இ.ம.எண்.4/2022 In அ.வ.எண்.69/2021</u>**

1. சுந்தர்ராஜன்
2. யுவராஜ் . . . **மனுதாரர்கள்/வாதிகள்**

**//எதிராக//**

1. பாப்பாத்தி
2. செல்வராஜ்
3. சுமதி
4. அன்பரசன்
5. செல்வி (Given up) . . . **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இம்மனுவானது என் முன்பு 04.07.2023ம் தேதியில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.T.மதுமதி, அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிதரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.Ra.அய்யாவு, அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.அய்யப்பன், அவர்கள் ஆஜராகியும், 5ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் Given up செய்யப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்/வாதிகள் தரப்பில் அபிடவிட்டில் கண்ட காரணங்களுக்காக தாவா பிராதை திருத்த கோரும் மனுவை அனுமதிக்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுதாரர்கள் தரப்பு மனு பிரமாணப்பத்திரிக்கையின் சுருக்கம்:</u>**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிரமாணப்பத்திரிக்கையில், மனுதாரர் தாவாவில் 2ம் வாதி என்றும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிளுக்கு எதிராக விளம்புகைக்கும், நிரந்தர உறுத்துக்கட்டளைக்கும் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கு நிலுவையில் உள்ளது. இந்நிலையில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கடந்த 26.05.2022 தேதியில் தாவா பாதையை மறித்து கம்பிவேலி அமைத்துள்ளனர். அவ்வாறு கம்பிவேலி அமைத்தது பொருத்து மனுதாரர்களுக்கு 01.06.2022 தேதியில் கேவியேட் மனுவின் நகலும் அனுப்பியுள்ளனர். அதன் நகலை இம்மனுவுடன் மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். தாவா நிலுவையில் உள்ள சமயத்திலும், நீதிமன்ற ஆணையர் தாவாசொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்த பின்னிட்டும் வேண்டுமென்றே மனுதாரர்களை தொந்தரவு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் பாதையின் குறுக்கே எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் சுமார் 20அடி நீளத்திற்கு கிழமேலிலும், 15அடி நிலத்திற்கு தென்வடலிலும் கம்பிவேலி அமைத்துள்ளனர். மேற்படியார்கள் பாதையை மறித்து கம்பிவேலி அமைத்துள்ளதால் மனுதாரர்கள் அவர்களுடைய நிலத்திற்கு சென்றுவர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே தாவாவை மனுவில் கண்டுள்ளவாறு திருத்திக்கொள்ள உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. 1ம் எதிர்மனுதாரர் /பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுஉரை : (2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்)</u>**

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்மனுஉரையில், மனுதாரர்கள்/வாதிகள் தங்களின் அபிடவிட்டில் கூறியுள்ளவாறு கடந்த 26.05.2022ம் தேதியில் தாவாபாதையை மறித்து இவ்வெதிர்மனுதாரர்/பிரதிவாதி கம்பிவேலி அமைக்கவில்லை. மேலும் அதற்காக மேற்படி கேவியேட் மனுவினையும் அனுப்பவில்லை. மனுதாரர்கள்/வாதிகள் கூறியுள்ளவாறு தொந்தரவு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தாவாபாதையின் குறுக்கு இவ்வெதிர்மனுதாரர்/பிரதிவாதி சுமார் 20அடி நீளத்திற்கு கிழமேலிலும், 15அடி நீளத்திற்கு தென்டவலிலும் கம்பிவேலி

அமைக்கவில்லை. உண்மையில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு தங்களின் நிலங்களிற்கு அம்பாயிபாளையத்தில் இருந்து தோட்டமுடையான்பட்டி செல்லும் சாலையில் உள்ள உசிலம்குட்டை கரை வழியாகதான் தடபாத்தியம் உள்ளது. அதன் வழியாகதான் இதுநாள்வரை மனுதாரர்கள்/வாதிகளும், அவர்களின் முன்னோர்களும் கால்நடைகள், வண்டி வாகனாதிகள் எடுத்துச்சென்று அனுபவம் செய்து வருகின்றனர்.

இவ்வெதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு முன்பாத்தியஸ்தரான சின்னையன் என்பவர் இவ்வெதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியின் நிலத்தினை ஆதியில் கிரையம் வாங்கிய சமயத்தில், இருசக்கர வாகனங்கள் மற்றும் சொகுசு வாகனங்கள் எடுத்து சென்றுவர தாவா மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள PQ பாதையை உருவாக்கி அனுபவித்து வந்தார். அதன் பின்னிட்டு இவ்வெதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த விக்னேஷ், கிருத்திகா மற்றும் லட்சுமி ஆகியோர் மேற்படி பாதையை அனுபவித்து அதன் பின்னிட்டு இவ்வெதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி கிரையம் பெற்று மேற்படி பாதையை அனுபவம் செய்து வந்துள்ளார். மேற்படி பாதையானது இவ்வெதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு மட்டுமே தனிப்பட்டு பாத்தியப்பட்டிருந்ததாகும். மேற்படி மனுதாரர்கள்/வாதிகள் ஒருநாளும் தாவா பாதையில் சென்று அனுபவம் செய்யவில்லை. மேலும் முன்பாத்தியஸ்தர்கள் எவரும் மனுதாரர்கள்/வாதிகளுக்கு இவ்வெதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியின் நிலத்தின் வழியாக சென்றுவர எவ்வித Easementary Rightம் கொடுக்கவில்லை.

இவ்வெதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியின் நிலத்தினை அவரிடம் இருந்து அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில், இந்த தாவாவினை தாக்கல் செய்துள்ளனர். கடந்த 19.04.2021ம் தேதியில், மனுதாரர்கள்/வாதிகளும், அவரது ஆட்களும் இவ்வெதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தனது பாதுகாப்பிற்கு தன்னுடைய நிலத்தில் அமைத்திருந்த முள்வேலிகளை சேதப்படுத்தி இவ்வெதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி வைத்திருந்த CCTV கேமராவை துணி சாக்குகளை கொண்டு மூடி

சட்டத்திறக்கு புறம்பான செயல்களில் ஈடுபட்டுள்ளனர். அதுகுறித்து இவ்வெதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி எருமப்பட்டி காவல்நிலையத்தில் புகார் அளித்ததன் பேரில் குற்ற எண்.256/2021ல் சேந்தமங்கலம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் C.C.No.21/2022 என்ற எண்ணில் குற்றவியல் வழக்கு தொடுக்கப்பட்டு, மேற்படி வழக்கு விசாரணைக்கு பின்னிட்டு மேற்படி நபர்களுக்கு கடந்த 17.08.2022ம் தேதியில் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தாவா மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள PQR வண்டிப்பாதையானது கற்பனையானது. உண்மையில் தாவா மாதிரி வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள P பகுதியிலிருந்து இவ்வெதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியின் நிலம் வரை உள்ள சர்வே எண்.327 கொண்ட பகுதியானது அரசாங்க நீர்நிலை குட்டை ஆகும். மேற்படி குட்டையை 5ம் எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதி இதுநாள்வரை ஆக்கிரமிப்பு செய்து வந்ததோடு, இவ்வெதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தனது நிலத்திற்கு செல்லும் பாதையை மனுதாரர்கள்/வாதிகளுடன் கூட்டுசேர்ந்து தடைசெய்து வந்துள்ளார். இவ்வெதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியிடமிருந்து அவரது நிலத்தினை அபகரித்தே தீரவேண்டும் என்ற நோக்கத்தில் O.S.No.98/2021 என்ற எண்ணில் பொய்யான சங்கதிகளை கொண்டு நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. தாவா மாதிரி வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள P இடத்திலிருந்து இவ்வெதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியின் நிலத்தின் மேல்புறம் வரை உள்ள அரசு நீர்நிலை குட்டை ஆக்கிரமிப்பினை அரசு அதிகாரிகள் கடந்த 20.05.2022ம் தேதியில் அகற்றி அதில் தற்போது மண் குவியலை ஏற்படுத்தியுள்ளனர். இதனால் இவ்வெதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு இருந்த ஒரே தடமானதும் அழிக்கப்பட்டு, இவ்வெதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தனது நிலத்திற்கு செல்லமுடியாமல் சிரமத்தில் உள்ளார். இந்நிலையில் மனுதாரர்கள்/வாதிகள் இவ்வெதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு இடையூறு ஏற்டுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில், மேற்படியார்களுக்கு உள்ள தடத்தின் வழியாக செல்லாமல், வேண்டுமென்றே இவ்வெதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு மட்டுமே பாத்தியப்பட்ட

அவரது நிலத்தின் குறுக்கே அத்துமீறி செல்ல கடந்த 22.05.2022ம் தேதியில் முற்பட்டுள்ளனர். எனவே இவ்வெதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தனக்கு மட்டுமே பாத்தியப்பட்ட நிலத்தில் தனது தற்காப்பிற்காக தனது நிலத்தின் மேல்புறம் தென்வடலாக மட்டும் சுமார் 15 அடி நீளத்தில் கம்பிவேலி அமைத்துள்ளார் என்றும் கேவியேட் மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவா திருத்தங்கள் தேவையற்றது என்றும் மனுவில் கூறப்பட்டுள்ளது. ஆகவே மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிர்மனுஉரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**4. இந்நீதிமன்றம் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை என்னவென்றால் மனுதாரர்களின் இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே ஆகும்.**

**5. தீர்வு:–**

அசல் வழக்கு கடந்த 15.04.2021 தேதியில் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் கடந்த 12.11.2021 தேதியில் வழக்கெழுவினா வனையப்பட்டு, அசல் வழக்கு விசாரணைக்காக உள்ள நிலையில் மனுதாரர்கள் தரப்பில் தாவா திருத்தம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.** மனுதாரர்கள் தரப்பில் வாதிடும்போது, எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் கடந்த 26.05.2022 தேதியில் தாவா பாதையை மறித்து கம்பிவேலி அமைத்துள்ளதாகவும், நீதிமன்ற ஆணையர் தாவாசொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்தபின்பு மனுதாரரை தொந்தரவு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் பாதையின் குறுக்கு 20 அடி நீளத்திற்கும் கிழமேலிலும், 15 அடி நீளத்தில் தென்வடலில் கம்பிவேலி அமைத்துள்ளார் என்றும் ஆகவே அதை பொறுத்து செயலுறுத்துக்கட்டளை பரிகாரம்

கோர வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும் ஆகவே தாவா பிராதை மனுவில் கண்டுள்ளவாறு திருத்த அனுமதிக்க வேண்டும் என்று வாதிடப்பட்டது.

**7.** எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதிடும்போது, தாவாப்பாதை எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு மட்டும் தனிப்பட பாத்தியப்பட்டது என்றும் மனுதாரர் ஒருநாளும் தாவா பாதையில் சென்று அனுபவம் செய்யவில்லை என்றும். இவ்வெதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி நிலத்தின் வழியாக சென்றுவர எவ்வித Easementary Rightம் முன்பாத்தியஸ்தர்கள் எவரும் மனுதாரர்களுக்கு பாத்தியம் கொடுக்கவில்லை என்றும் 1ம் பிரதிவாதி தனக்கு மட்டுமே பாத்தியப்பட்ட நிலத்தில் தனது தற்காப்பிற்காக தனது தற்காப்பிற்காக தனது நிலத்தின் மேல்புறம் தென்வடலாக மட்டும் சுமார் 15அடி நீளத்தில் கம்பிவேலி அமைத்துள்ளார் என்றும் கேவியேட் மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் கோரியுள்ள திருத்தங்கள் தேவையற்றது என்றும், 1ம் பிரதிவாதியிடமிருந்து அவரது நிலத்தை அபகரித்து மனஉளைச்சல் தரவேண்டும் என்ற எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்துள்ளார் என்றும் ஆகவே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று வாதிடப்பட்டது.

**8.** மனுதாரர் தரப்பில், தாவாபாதையின் குறுக்கு எதிர்மனுதாரர்கள் கம்பிவேலி அமைத்துவிட்டதாக கூறும்நிலையில் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தனக்கு மட்டுமே பாத்தியப்பட்ட நிலத்தில் தனது தற்காப்பிற்காக தனது நிலத்தின் மேல்புறம் தென்வடலாக மட்டும் சுமார் 15அடி நீளத்தில் கம்பிவேலி அமைத்துள்ளதாக கூறியுள்ளார். அவ்வாறு இருதரப்பினரும் கூறும் சங்கதிகள் வழக்கு விசாரணையின் முடிவில்தான் தெரியவரும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் தரப்பினர்கள் கூறும் சங்கதிகளை உரிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்க கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும், இயற்கைநீதி கொள்கை அடிப்படையிலும், தரப்பினர்களுக்கு அவர்களது வழக்கை எடுத்துரைக்க உரியவாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே மனுதாரரின் மனுவை

அனுமதிக்க இந்நீதிமன்றம் உத்தேசிக்கிறது.

**முடிவாக,** மனுதாரர்களின் மனுவை செலவுத் தொகையின்றி அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று திறந்த நீதிமன்றத்தில் 2023ம் வருடம் செப்டம்பர் மாதம் 22ம் நாள் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

P K DHAMAYANTHI

Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2023.09.22 20:45:57 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

1. **மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:---** இல்லை--

2. **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-** --இல்லை--

P K DHAMAYANTHI

Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2023.09.22 20:46:01 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**